IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.170/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 4.35 PM.

பி.வா.சா. 1 சாட்சி சுரேஷ் த.பெ.அழகர்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 20.01.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதி தாக்கல் செய்யப்பட்ட பிராதை படித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். வாதி எத்தனை இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 11 ஆகும். சொத்துக்கள் அனைத்தும் ராமசாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது ஆகும் என்றால் சரிதான். ராமசாமி நாயுடுவின் மனைவி பெயர் என்ன என்றால் ஞானம்மாள் ஆகும். ராமசாமி நாயுடு மற்றும் ஞானம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பெண் மக்கள். அவர்கள் பெயர் சுப்பம்மாள், லெட்சுமி, ஞானம்மாள் ஆகும்.

2. தாவா சொத்துக்களை தரவிர்த்து ராமசாமி நாயுடுவிற்கு வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதி லெட்சுமியின் மகன் ஆவேன் என்றால் சரிதான். எனது தாத்தா ராமசாமி நாயுடு உயிருடன் இருக்கும் வரை அவர்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தாத்தா உயிருடன் இருக்கும் போது தாவா சொத்துக்களை பொறுத்து எந்தவிதமான உயில் ஆவணங்கள் அல்லது எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா இறந்த பிறகு மேற்படி சொத்துக்கள் அனைத்தும் அவரது வாரிசுகளான பெண் மக்களுக்கு

பாத்தியப்பட்டது என்றால் அவர்கள் அனைவரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். மேற்படி பெண் மக்களுக்குள் எந்த விதமான எழுத்துமூலமான பத்திரங்கள் பதிந்து பிரித்து கொள்ளவில்லை என்றால் எழுத்து மூலமாக பாகபிரிவினை செய்யப்பட்டது.

3. பாகபிரிவினை எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 15.05.1982 ம் தேதி பாக பிரிவினை வெண்ணிலை பாகபத்திரம் எழுதப்பட்டது. யார் யார் முன்னாடி பாகபிரிவினை எழுதப்பட்டது என்றால் நாராயணசாமி, அய்யப்பநாயுடு, தெம்மி நாயுடு என்ற அழகர்சாமி முன் எழுதப்பட்டது. மேற்படி விபரத்தை பிராதில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். எனது எதிர் வழக்குரையில் மேற்படி விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. மேற்படி 1982 ம் வருடம் பாகபிரிவினை பத்திரம் எழுதப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து எனது தாத்தா ராமசாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் பிரச்சனை உருவாகிறது என்றால் சரிதான். இன்றைய தேதி வரை தாவா சொத்தை வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது பாட்டி ஞானம்மாள் இறக்கும் சமயத்தில் சுமார் 88 வயது இருக்கும் என்றால் சரிதான். அவர்கள் எத்தனை ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருப்பார்கள் என்றால் 15 ஆண்டுகளாக இருந்தார்கள்.

5. ஞானம்மாள் 15 ஆண்டுகளாக சுயநினைவின்றி படுத்தப்படுக்கையாக இருந்தார் என்றால் வீட்டில் நடமாட்டம் இருந்தது. வெளியில் நடமாட்டம் இல்லை. நானும், 1, 2 பிரதிவாதிகளும் ஞானம்மாள் உடல்நிலை

சரியில்லாததை சாதகமாககொண்டு ஞானம்மாளுக்கு தெரியாமல் பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் (சாட்சி கேள்விக்கு சரியாக புரிந்து பதில் கூறவில்லை) உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். சுயநினைவுடன் கொடுத்தார்.

6. நான் எனது எதிர் வழக்குரையை தாண்டி எனது தாய் வழி பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனக்கும் பங்கு உண்டு என்று எதிர் கோரிக்கை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்துக்களை பொறுத்தவரையில்தான் எங்களுக்குள் பிரச்சனை என்றாலும் ஞானம்மாள் சொத்துக்கள் பொறுத்து ஏற்கனவே கிரையம் மற்றும் தானம் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் அனைத்தும் ராமசாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவரது மனைவி ஞானம்மாளுக்கு தாவா சொத்துக்களில் எந்தவித தனிப்பட்ட உரிமையில்லை என்றால் சரியல்ல. உரிமையுள்ளது. ராமசாமி நாயுடு என்பவர் ஞானம்மாளுக்கு தனிப்பட்ட முறையில் எந்தவித பத்திரமும் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். அதன் அடிப்படையில் ராமசாமிநாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வாதிக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி எதிர் வழக்குரையில் எந்தவித குறிப்பும் சொல்லவில்லை என்றும் அதனால் பி.வா.சா.ஆ.1 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் வாதி எந்தவிதமான கையெழுத்தும் செய்யவில்லை என்றாலும் மேற்படி ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எனது கணவர் ராமசாமி அவர்களுக்கு பூர்வீகப்பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ல் கட்டுப்பட்ட சொத்து பூர்வீக சொத்து என்பதால் ஞானம்மாளுக்கு தான பத்திரம் எழுதிகொடுக்க எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

9. தான பத்திரம் எழுதிகொடுத்து எத்தனை நாட்கள் கழித்து ஞானம்மாள் இறந்தார் என்றால் ஒரு மாதம் கழித்து இறந்துவிட்டார். தான பத்திரம் ஞானம்மாளை ஏமாற்றி மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தான பத்திரத்தின் அடிப்படையில் எவ்வித தனிப்பட்ட உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 ஆவணம் ஞானம்மாளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது தாத்தா வழி பாத்தியப்பட்ட சொத்து ஆகும்.

10. பி.வா.சா.ஆ3 ஆவணத்தில் ஞானம்மாள் அச்சொத்தை எனது பூர்வீக பாத்தியப்பட்டு எனது பாகத்திற்கு கிடைத்து என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறுதான் உள்ளது. பி.வா.சா.ஆ2 பத்திரம் சரியா அல்லது பி.வா.சா.ஆ. 3 பத்திரம் சரியா என்றால் பி.வா.சா.ஆ2 பத்திரம்தான் சரியானது. பி.வா.சா.ஆ 3 பத்திரம் எழுதப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பத்திரம் எழுதப்பட்ட விபரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட முன்பாகவே தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்புதான் தெரியும். மேற்படி ஆவணம் 2010ம் ஆண்டுக்கு பின்பு தெரியும் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை பி.வா.சா.ஆ3 பத்திரம் தவறானது என்றும் அதில் எனக்கு உரிமையுள்ளது என்றும் எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. பி.வா.சா.ஆ. 3 பத்திரத்தை பற்றி வழக்கு தொடராததற்கு காரணம் அதில் உள்ள சொத்து ஞானம்மாள் அவர்களுக்கு தாயார் வழி சொத்து என்பதாலும் அதில் உரிமை இல்லாததனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ராமசாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதில் அனைத்திலும் வாதிகளுக்கு பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலைநிற்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 05.05 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.20 11:24:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.